அரசாங்கம் **கொண்டு வந்ததுமல்ல.** வெள்ளைக்காரர், பிரிட்டிஷார் ஆளுகிற காலத்தில் வந்த பாலாறு பேசின் ரூல்ஸை அகற்றவேண்டுமென்றால் அதை அவசரத் தீர்மாகக் கருத அகற்ற வேண்டுமென்றால் அதை அவசரத் தீர்மானமாகக் கருத முடியாது. அது அண்மையில் நடைபெற்ற காரியமாகவும் கருத முடியாது. ஆகவே, அதைக் கொண்டுவர நான் அனுமதி மறுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) மின்சாரக்குழு எழுப்பும் கடனுக்காக விவசாயிகள், நிர்ப்பந்திக்கப்படுதல்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் 42-வது விதியின்கீழ் சட்டசபை நடவடிக்கைகளை ஒத்தி வைக்குமாறு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

"தமிழ்நாடு மின்சாரக் குழுவினர் ரூபாய் மூன்று கோடி கடன் எழுப்புவதில் அதிகாரிகள், விவசாயிகளை நிர்ப்பந்தப்படுத்தி வசூலிப்பதாகத் தகவல் வந்துள்ளது. பணம் கொடுக்க இயலாதவர்களிடம், வற்புறுத்தி கமிஷன் தொகையை மட்டும் விவசாயிகளிடம் வசூல் செய்து கொண்டு உடனே கடன் பத்திரங்களை பாங்குகளில் வைத்து மீதம் ரூ. 85-யையும் பெற்றுக்கொண்டு, கடன் வசூலித்து விட்டதாகக் கூறுகின்றனர். விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்படுகிறது" என்று கொடுத்திருக்கிறார்கள். இது சாதாரண அரசினர் நிர்வாகத்திற்குப் புறம்பானதாகக் கருத முடியாது. ஒத்தி வைப்புத் தீர்மானம் சாதாரண நிர்வாக விஷயத்திற்கு, ஆர்டினரி அட்மினிஸ்ட்ரேஷனுக்குப் புறம்பாக இருக்கவேண்டும். ஆர்டினரி அட்மினிஸ்ட்ரேஷனுக்கு, சாதாரண நிர்வாகத்திற்குப் புறம்பானதாக இருப்பதாக இதைக் கருத முடியாது என்பது மட்டுமல்லாமல் கவர்னர் உரை மீது மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பையா அவர்கள் இன்று பேசியிருக்கிறார்கள். அதில் அவர்கள் இதுபற்றிக் குறிப்பிட வாய்ப்பிருக்கிறது. ஆகவே, இந்த இரண்டு காரணங்களினால் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. அறிவிப்புகள்.

(அ) உரிமைக் குழுவிற்கான தேர்தல்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: இந்தப் பேரவைக்கு நான் தெரிவிக்க வேண்டிய அறிவிப்புகள் சில உள்ளன.

முதலாவதாக, 1967-68-ம் ஆண்டுக்குரிய உரிமைக் குழுவிற்கு ப்ரிவிலேஜ் கமிட்டிக்கு இந்தப் பேரவை 12 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு 12 உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பெயர்களாவன :—

1. திரு. சி. கோவிந்தராஜன்.
2. திரு. க. இராமமூர்த்தி.
3. திரு. எம். வில்லியம்.